# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1998/2 - 2016 දෙසැම්බර් මස 19 වැනි සඳුදා - 2016.12.19

*1998/2 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டம்**

கட்டளை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தில் 9 A அ பிரிவின் (டி) பந்தியில் எனக்குரித்தாக்கப்பட்ட தத்தவங்களின் பயனைக் கொண்டு, மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகிய நான், 1987 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதிய 453/24 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் பேரில் அமைத்துருவாக்கியுள்ள தமன்கடுவ பிரதேச சபை, பொலன்னறுவை மா நகர சபை மற்றும் பொலன்னறுவை பிரதேச சபை என்பன அமைத்துருவாக்குவதற்கு 2017.06.30 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் வண்ணம் கலைக்கின்றேன்.*

பைஸர் முஸ்தபா,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
அமைச்சர்.

கொழும்பு,
*2016, திசெம்பர் 17.*

*12- 1311/1*

---

**மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்**

கட்டளை

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தில் 2, 3, 5 மற்றும் 9 ஆகிய பிரிவுகளாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல் கட்டளைச் சட்டத்திலும் 27 ஈ பிரிவில் (3) ஆவது உப பிரிவில் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகிய நான்,: இக்கட்டளையின் மூலம் :-

(1) இங்கு அட்டவணையில் I ஆவது பகுதியில் காட்டப்பட்டுள்ள பிரதேசம், அக் கட்டளைச் சட்டத்தின் கருமங்களின் பொருட்டு மாநகரமாதல் வேண்டுமென்று வெளிப்படுத்துகின்றேன்.

(2) அந்த அட்டவணையில் II ஆவது பகுதியில் காட்டப்பட்டுள்ள எல்லைகள், அந்த மாநகர சபையின் நிர்வாக எல்லைகளாகும் என நிர்ணயிக்கின்றேன்.

(3) இந்த கட்டளையில் (1) ஆவது பந்தியின் கீழ் வெளியிடப்பட்டுள்ள மாநகரத்தின் பொருட்டு, மாநகர சபை அமைத்துருவாக்கி, அந்த மாநகர சபைக்கு பின்வரும் பெயரை குறித்தொதுக்குகின்றேன்.

"பொலன்னறுவை மாநகர சபை"

*(4)* பொலன்னறுவை மாநகர சபை,

(i) மாநகர சபை கட்டளைச் சட்டத்தில் 5 ஆவது பிரிவில் (1) ஆவது உப பிரிவில் பந்தி (அ) இன் பிரகாரம் ஆறு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும் ;

(ii) மாநகர சபை கட்டளைச் சட்டத்தில் 5 ஆவது பிரிவில் (1) ஆவது உப பிரிவில் பந்தி (ஆ) இன் பிரகாரம் நியமனம் செய்துகொள்ள வேண்டிய ஒரு உறுப்பினரையும் ;

(iii) உள்ளூராட்சி அதிகார சபை தேர்தல் கட்டளைச் சட்டத்தில் 27 (ஈ) பிரிவில் உப பிரிவு (3) இன் கீழ் தெரிவு செய்யப்படவேண்டிய இரு பெண் உறுப்பினரையும் கொண்டிருத்தல் வேண்டுமென விதிக்கின்றேன்.

*(5)* பொலன்னறுவை மாநகர சபையில் பதவிக்காலம் ஆரம்பிக்க வேண்டிய திகதி 2017.07.01 ஆந் திகதி ஆதல் வேண்டுமென விதிக்கின்றேன்.

பைஸர் முஸ்தபா,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
அமைச்சர்.

கொழும்பு,
2016, திசெம்பர் 17.

அட்டவணை

*I* ஆவது பகுதி

தமன்கடுவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளை கொண்டமைந்த காணிப் பிரதேசம் :

(153) பெந்தி வெவ, (155) எத்துமல்பிட்டிய, (155A) சிரிசங்கபொ பிரதேசம், (162) வீர பிரதேசம், (163) புலதிசி பிரதேசம், (167) பொத்குல் பிரதேசம், (168) உடவெல, (169) மகாவலி பிரதேசம், (170) நிஷ்ஷங்கமல்ல பிரதேசம், (171) தோபா வெவ, (172) பொலன்னறுவை நகரம், (178) கல்தபராவ, (179) குறுப்பு சந்தி, (180) மகாசென் பிரதேசம், (183) கதுருவெல மேற்கு, (184) கதுருவெல தெற்கு, (185) பெரகும் பிரதேசம் (186) கதுருவெல கிழக்கு.

அட்டவணை

*II* ஆவது பகுதி

பொலன்னறுவை மாநகர சபையின் நிர்வாக எல்லைகள் :-

வடக்கு : எத்துகல்பிட்டிய கிராம ஆலுவலர் பிரிவின் வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகளும், பெந்திவெவ, கல்தம்பராவ மற்றும் கதுருவெல கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் வடக்கு எல்லைகளும், கல்தம்பராவ குறுப்பு சந்தி மற்றும் மகாசென் பிரதேச கிராம அலுவலர் பிரிவுகளில் கிழக்கு எல்லைகளும் ;

கிழக்கு : கதுருவெல தெற்கு, பெரகும் பிரதேசம், வீர பிரதேசம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் கிழக்கு எல்லைகளும்;

தெற்கு : வீர பிரதேசம், நிஷ்ஷங்கமல்ல பிரதேசம், உடுவெல, பொத்துகல் பிரதேசம், கிராம அலுவலர் பிரிவுகளில் தெற்கு எல்லைகளும் ;

மேற்கு : பொத்துகல் பிரதேசம், தோபாவெவ, பெந்திவெவ, எத்துமல்பிட்டிய, சிரிசங்கபொ பிரதேச கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கு எல்லைகளுமாகும்.

*12- 1311/2*

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம்**

*கட்டளை*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தில் 2 ஆவது பிரிவில் (1) ஆவது உப பிரிவில், 4, பிரிவில் 6 ஆவது பிரிவிலும், உள்ளூராட்சி அதிகார சபைகளின் தேர்தல் சட்டத்திலும் 27 ஈ பிரிவிலும் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்தவங்களின் பிரகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகிய நான், இந்த கட்டளையின் மூலம்,*

*இங்கு அட்டவணையில் I ஆவது பகுதியில் காட்டப்பட்டுள்ள பிரதேசம், அந்த கட்டளைச் சட்டத்தின் கருமங்களுக்காக பிரதேச சபை பிரதேச சபை பிரதேசமாதல் வேண்டுமென்று வெளிப்படுத்துகின்றேன்.*

*(1) அந்த அட்டவணையில் பகுதி II இல் காட்டப்பட்டுள்ள எல்லைகள், அந்த மாநகர சபையின் நிர்வாக எல்லைகளாக விதிக்கின்றேன்.*

*(2) இந்த கட்டளையில் (II) ஆவது பகுதியில் காட்டப்பட்டுள்ள எல்லைகள், அந்த பிரதேச சபை பிரதேசத்தில் நிர்வாக எல்லைகளாக வேண்டுமென நிர்ணயிக்கின்றேன்.*

*(3) இந்த கட்டளையில் (1) ஆவது பந்தியின் கீழ் வெளியிடப்பட்டுள்ள பிரதேச சபை பிரதேசத்தின் பொருட்டு பிரதேச சபை அமைத்துருவாக்கி, அந்த பிரதேச சபைக்கு பின்வரும் பெயரை குறித்தொதுக்குகின்றேன்.*

**"பொலன்னறுவை பிரதேச சபை"**

*(i) பிரதேச சபை சட்டத்தில் 4 ஆவது பிரிவில் (1) ஆவது உப பிரிவில் (அ) பந்தியின் பிரகாரம் 10 தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும் ;*

*(ii) பிரதேச சபை சட்டத்தில் 4 ஆவது பிரிவில் (1) ஆவது உப பிரிவில் (ஆ) பந்தியின் பிரகாரம் நியமனம் செய்துகொள்ள வேண்டிய 3 உறுப்பினர்களையும், ;*

*(iii) உள்ளூராட்சி அதிகார சபை தேர்தல் கட்டளைச் சட்டத்தில் 27 (ஈ) பிரிவில் உப பிரிவு (3) இன் கீழ் தெரிவு செய்யப்படவேண்டிய 4 பெண் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென விதிக்கின்றேன்.*

*(4) பொலன்னறுவை பிரதேச சபையில் பதவிக்காலம் ஆரம்பிக்க வேண்டிய திகதி 2017.07.01 ஆந் திகதி ஆதல் வேண்டுமென விதிக்கின்றேன்.*

*பைஸர் முஸ்தபா,*
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி*
*அமைச்சர்.*

*கொழும்பு,*
*2016, திசெம்பர் 17.*

*அட்டவணை*

*I ஆவது பகுதி*

*பொலன்னறுவை மாவட்டத்தில், தமன்கடுவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளை கொண்டமைந்த காணிப் பிரதேசம் :*

*(154) சமுதுருகம, (156) நிக்கவெவ, (157) சிங்க உதாகம, (158) கடவல வெவ், (159) நகினகிர அலுத் வெவ, (160) பட்டகிர அலுத் வெவ, (161) கனங் கொல்ல, (164) பராக்கிரம சமுத்திர, (165) அம்பன் கங்க, (166) கலக கெல, (173) பலுகஸ்தமன 01 எல, (174) பலுகஸ் தண 02 எல, (175) பலுகஸ்தமன 03 எல, (176) பலுகஸ்தமன உதுர, (177) பலுகஸ்தமன தகுன, (181) மாணிக்கம் பட்டிய, (182) நெலும் வில,*

*(187) கல் எல்ல, (188) கல் எல்ல பட்டகிர, (189) கொட்டலிய, (190) காலிங்க எல, (191) தமனகெமுனுபுர, (192) திவுலான, (193) புதுர், (194) சிங்கராஜபுர, (195) ஓனாகம, (196) விஜயராஜபுர, (197) அமதமலுவ, (198) லக்ஷ உயன, (199) நிஷ்ஷங்கமல்லபுர, (200) சேவாகம, (201) வெவதென்ன, (202) மொனரதென்ன, (203) விஜயபாபுர, (204) சிங்ககபுர, (205) உணகல வேஹேர தெற்கு, (206) சாந்திபுர*

*II ஆவது பகுதி*

பொலன்னறுவை பிரதேச சபையின் நிர்வாக எல்லைகள் :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஹிங்குரக்கொடை பிரதேச சபையின் கிழக்கு எல்லையின் ஒரு பகுதியும், லங்காபுர பிரதேச சபையின் தெற்கு எல்லையும் ; |
| கிழக்கு | : | திம்புலாகல பிரதேச சபையின் மேற்கு எல்லையும் ; |
| தெற்கு | : | கலஹகல கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையும் கிழக்கு எல்லையின் ஒரு பகுதியும் ; |
| மேற்கு | : | கலஹகல கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையும், என்பவற்றில் அமைந்துள்ள பொலன்னறுவை மாநகர சபையின் நிர்வாக எல்லைகள். |

*12- 1311/3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.